4. எரிசக்தித் துறை, தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியவை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தலைவிதியை மாற்றுகிற விதி ஒன்று உண்டு என்று சொன்னால், அது அம்மா அவர்கள் உருவாக்கிய 110 விதிதான் என்பதை இந்த நேரத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் மின்சார வாரியத்தில் பல அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். இது வரலாற்றில் ஒரு மைல் கல் என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், "வருகின்ற ஓராண்டுக் காலத்திற்குள், எங்கள் பகுதிக்குத் துணை மின் நிலையங்கள் வேண்டும்" என்று தினந்தோறும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது; மின் மாற்றிகள் மாற்றித் தர வேண்டுமென்றும்; மின்னூட்டிகள் மாற்றித்தர வேண்டுமென்றும் கோரிக்கைகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் ஒரு தீர்வாகத்தான் இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் இதுகாறும் இல்லாத அளவிற்கு, மணல்மேடு பகுதி உட்பட 4 இடங்களில் 400 கே.வி. துணை மின் நிலையங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 230 கே.வி. துணை மின் நிலையங்கள் 4; 110 கே.வி. துணை மின் நிலையங்கள் 44; (மேசையைத் தட்டும் ஒலி) 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள்; இதுகாறும் இல்லாத அளவிற்கு ஓராண்டு காலத்திற்குள்ளேயே 80 துணை மின் நிலையங்கள் என்று எந்தெந்தப் பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறதோ, அந்தப் பகுதிகளிலெல்லாம் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு*

வெளியிட்டிருக்கின்றார்கள். அத்துடன் சேர்த்து மின் பாதைகளும் அமைத்துத் தர வேண்டும். துணை மின் நிலையங்கள் மட்டும் அமைத்தால் போதாது என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மின் பாதைகளையும் அமைத்துத் தர வேண்டுமென்பதற்காக அதற்குண்டான நிதியையும் ஒதுக்கி, விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஓராண்டு காலத்திற்குள், தமிழகத்தில் எந்தெந்தப் பகுதியில், எங்கெங்கு துணை மின் நிலையங்கள் வேண்டுமோ, எந்த சட்டமன்ற உறுப்பினர் முன்கூட்டியே இடம் கண்டறிந்து கொடுக்கிறார்களோ, அந்த இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஓராண்டுக் காலத்திற்கு மட்டும், துணை மின் நிலையங்களுக்காகச் செலவு செய்கின்ற தொகை கிட்டத்தட்ட 4,500 கோடி ரூபாய். அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அறிவித்த அறிவிப்பு என்பது, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, வரலாற்றிலே ஒரு மைல் கல் என்று சொன்னால், அது மிகையாகாது. ஓராண்டுக் காலத்திற்குள், இதுபோன்று இத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுவது இதுகாறும் இல்லை என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள், 2015 ஜூன் மாதத்திலிருந்து தடையில்லாத மின்சாரத்தை தமிழகத்திற்குக் கொடுத்திருக்கின்றார்கள். அது தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

முற்பகல் 11–55

அதேபோன்று, மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது; மின் தேவை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தினால், எதிர்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கோரியிருந்தார்கள். அதற்கேற்பதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஓராண்டுக் காலத்திற்குள், எந்தெந்தப் பகுதிகளுக்கு, என்னென்ன தேவை என்பதையெல்லாம் அறிந்து, இன்றையதினம் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதுவும் சென்னை நகருக்கு மட்டும், கிட்டத்தட்ட 34 புதிய

[திரு. பி. தங்கமணி] [2017 ஜூன் 29

துணை மின் நிலையங்களில் இருக்கின்ற மின் மாற்றிகளின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகவும், அதேபோல் 33/11 KVA துணை மின் நிலையங்களில் இருக்கின்ற மின்னூட்டிகளையும் தரம் உயர்த்த வேண்டுமென்பதற்காகவும், விதி 110–ன்கீழ் ஒரு பெரிய திட்டத்தை இன்றையதினம் அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல, கோயம்பேட்டில் 400 கிலோ வாட் துணை மின் நிலையம் என பல்வேறு துணை மின் நிலையங்களையும் அறிவித்திருக்கின்றார்கள். அதேநேரத்தில் மின்சார சிக்கனத்தையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். மத்திய அரசின் Energy Efficiency Services Limited என்ற நிறுவனத்துடன் சேர்ந்து LED bulbs பொருத்துவது மற்றும் தரம் உயர்த்துவது போன்ற வகையில் சுமார் 11,000 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தையும் கொடுத்திருக்கின்றார்கள். ஆக, சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்த்ததை, இன்று மாண்புமிகு அம்மாவின் அரசு—மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அம்மாவின் நல்லாட்சியால், அனைத்து இல்லங்களிலும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. மக்களுடைய உள்ளங்களிலும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. இனிமேலும் தடையில்லாமல், ஒளி வீச வேண்டுமென்பதற்காக, தடையில்லா மின்சாரம் வழங்கிடும் வகையில் அறிவிப்புகள் வெளியிட்டமைக்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் இன்றையதினம் ஒரு மைல் கல்லாக விதி 110–ன்கீழ் இரண்டு அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். முதல் அறிவிப்பாக, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் கிராமத்தில் 1,295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு Multi Modal Logistics Park அமைப்பதற்கு அறிவித்திருக்கிறார்கள். இரண்டாவதாக, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டத்தில், தெற்கு வீரபாண்டியபுரம் மற்றும் மீளவட்டான் கிராமங்களில், சுமார் 1,600 ஏக்கரில் சிப்காட் தொழில் வளாகம்

நிலை–II உருவாக்குவதற்கும், அதன் வளர்ச்சிப் பணிகளுக்காக 60 கோடி ரூபாய் செலவில் drainage வசதி, சாலை வசதி, தண்ணீர் வசதிகளை செய்வதற்காகவும், அறிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு அறிவிப்புகளைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை தொழில் துறையின் சார்பாகத் தெரிவித்து, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டம், சேலம் மாநகரில் அமைந்துள்ள அன்னை சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகத்திற்கு, 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில், 100 குழந்தைகள் தங்குவதற்காக, அனைத்து உள் கட்டமைப்புகளையும் உள்ளடக்கி, குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, ஓர் அரிய திட்டத்தை வழங்கியிருக்கிறது. அந்தக் குழந்தைகளுடைய கல்வி, உணவு, உறைவிடம் அனைத்தையும் உள்ளடக்கி அறிவிப்புகளை அறிவித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1993 ஆம் ஆண்டிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கென்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி, 1994–ல் மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஒரு கொள்கையை வகுத்து, ஒவ்வொரு மாற்றுத் திறனாளியினுடைய வாழ்விலும் நன்மையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. நீண்ட நாள் கோரிக்கையான மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு, 3 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்ற

அறிவிப்பு, இன்றைக்கு மாற்றுத் திறனாளிகளின் நெஞ்சங்களில் பால் வார்த்திருக்கிறது. தடையற்ற ஒரு சூழலை மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஏற்படுத்துகின்ற வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மத்திய அரசு கொண்டு வந்த Accessible India Campaign என்பதனை முழுமையாக நடைமுறைப்படுத்தி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை எனது துறையின் சார்பாக தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் 12—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் வாழ்ந்து வரும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது வாழ்நாளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேம்படுத்திடவும், உள்ளூர் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும்விதமாகவும் பல்வேறு திட்டங்களையெல்லாம் செயல்படுத்தினார்கள். அந்தவகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை பலப்படுத்தும்விதமாக, மாண்புமிகு அம்மாவின் வழியில் நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு கடந்த நிதியாண்டைவிட, இந்த நிதியாண்டில் 53 சதவிகிதம் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்ததோடு அல்லாமல், இன்று விதி 110—ன்கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள முத்தான 3 திட்டங்களை மனதார வரவேற்று, துறையின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைக் கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)